Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 8

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 15 02-10-2003 வியாழக்கிழமை ஓசை 226

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-8628)

# குடாநாட்டில் காணாமல் போன 7 பேர் குறித்து மேல்நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு தாக்கல்

## எதிராளிகளாக இராணுவத் தளபதியும் இரு அதிகாரிளும்

(யாழ்ப்பாணம்)

**1996 மற்றும் 1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன ஏழு தமிழ் இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று யாழ். மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.இதில் எதிராளிகளாக சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுடன் மற்றும் இரு அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.**

தென்மராட்சியின் கோயிலாக் கண்டிப் பகுதியைச் சேர்ந்த கணேஷ் ரமேஸ் (வயது 32), நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர்களான தர்மலிங்கம் சுவிந்தராஜன் (வயது22), சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (வயது 21), இராமநாதன் அன்னலிங்கம் (வயது 20), கோபாலபிள்ளை அம்பிகைபாலன் (வயது19) மற்றும் பாஷையூர் பகுதியைச் சேர்ந்தவர்களான மைக்கல் பேர்னாட் ஜோன்சன் (வயது 34), அந்தோனி அனிஸ்ரன் (வயது 20) ஆகிய எழுவர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களே மேல்நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான சட்ட உதவிகள் அமைப்பைச் சார்ந்த சட்டத்தரணியான இ.ரெமிபீயஸ் காணாமல் போன இளைஞர்களது குடும்பங்கள் சார்பில் அவர்கள் காணாமல் போனமை தொடர்பான விபரங்களை மேல்நீதிமன்ற நீதிபதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்துக்களைத் தவிர்க்க காவல் துறையினர் கருத்தரங்கு

(மல்லாவி)

வீதிவிபத்து சம்பந்தமான கருத் தரங்கு நேற்று மல்லாவி மாவீரர் மண்டபத்தில் பி.பகல் 3.30 மணியளவில் வர்த்தக சங்கத் தலைவர் தி.தர்மலிங்கம் தலைமையில் துணுக்காய் பிரதேச காவல்துறைப் பொறுப்பாளரால் நடத்தப்பட்டது. இதில் துணுக்காய் பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் நடை பெறுகின்றது. இவ்விபத் துக்கள் நடைபெறாது வண்ணம் சாரதிகள் தங் கள் வாகனத்தை செலுத்த வேண்டும் என்றும் தற்போது துணுக்காய் பிரதேசத்தில் வீதிகள் புனரமைப்பு நடை பெறுவதால் வாகனம் செலுத்துபவர்கள் பாதசாரிகளுக்கு எவ்வித இடையூறுகள் இன்றி செலுத்துமாறு துணுக்காய் காவல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

வர்த்தக சங்க பணிப்பாளர்கள் உரிமை யாளர்கள் பலதரபட்ட வாகன சாரதிகளும் மக்களும் இக்கருத்த ரங்கில் கலந்து கொண்டனர்.(24)

## சமாதானமுயற்சி வெற்றியடைய அதிகாரப்பகிர்வுடன் 5 வருட இ.நி.சபை

### வழங்கவேண்டுமெனக் கூறுகிறார் அமைச்சர்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்வதற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் வடகிழக்கில் 05 வருட இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வழங்கவேண்டுமென அமைச்சர் மகிந்த விஜயசேகர கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மீன் பிடித்துறை நீரியல் வள அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தென்னிலங்கையில்ஒரு சில சிங்கள பிரிவுகள் இலங்கையில் தாம் மாத்திரமே வாழவேண்டுமென நினைக்கிறார்கள். வடக்கில் ஒருசில தமிழ் அமைப்புக்கள் தனிநாடு குறித்து கடும் போக்கான சிந்தனையில் உள்ளன. இவ்விரு சாராரும் தமது போக்கிலிருந்து விலகி ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்துடன் வாழ வேண்டும். இதற்கு ஒரே வழி அதிகாரப் பகிர்வு என அவர் மேலும் கூறியுள்ளார்.

## புலிகளைப் பேச்சிற்கு இணங்க வைக்குக!

### கனடாவிடம் சிறிலங்கா கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தைக்கு வருவதற்கு இணங்க வைக்கும்படி இலங்கை அரசு கன டாவை கேட்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நேற்று கூறினார்.

சமாதான திட்டத்தில் எல்லாக் கட்சிகளையும் பங்குபற்ற வைக்கும் செயற்பாட்டில் கனடா ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்கு வரத்தூண்டும் படி கனடாவை கோரியுள்ளதாக அமைச்சர் கூறினார். இரு தசாப்த காலத்திற்கு பின் கனடா வெளிநாட்டு அமைசசர் இலங்கைக்கு வரவிருப்பது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகின்றது.

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கனடா

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கெதிரான ஜே.வி.பி.யின் பேரணி கொழும்பை அடைந்தது

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து "ஜே.வி.பி. கண்டியில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று கொழும்பு லிப்ரன் சுற்றுவட்டத்தை சென்றடைந்தது. கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட பேரணி நேற்று முன்தினம் கடவத்தை சென்றடைந்தது. இந்தப் பேரணியில் ஜே.வி.பி.யின் செயலாளர் டில்வின் சில்வா, பிரச்சார செயலர் விமல் வீரவன்ச உட்பட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து எதிர்ப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

## "நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்" சிறப்புற நடைபெற்ற நூல் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களின் வாழ்த்துச் செய்தியைத் தாங்கியதான "நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்" எனும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பத்தாண்டு கால போரியல் வரலாற்றை சித்தரிக்கும் நூல் அறிமுக விழா நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதல் படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் பத்தாண்டு கால போர் வரலாற்றையும் அதில் வீரகாவியமான வீரர்களின் பெயர்கள் மற்றும் பல்வேறு விடயங்களைத் தாங்கியவாறு வெளியாகிய இந்நூலுக்கான கிளிநொச்சியில் நடைபெற்ற அறிமுக விழா சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுப் போராளி காண்டீபன் தலைமையில் நடைபெற்றது. இதில்



தமிழீழ தேசியக்கொடியை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்கள் ஏற்றிவைத்தார். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் கொடியினை சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் ஏற்றி வைத்ததைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி - ஜே.வி.பி. பேச்சு நாளை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் கூட்டுச் சேர்வது குறித்த பேச்சுவார்த்தை மீண்டும் நாளை நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஐவர் அடங்கிய குழு ஒன்றை சனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளமை தெரிந்ததே.

பொ.ஜ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேம் ஜெயந்த, சரத் அமுனுகம, நிமால் சிறிபால டி சில்வா, தயாரட்ண ஆகியோரே சனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவில் இடம் பெற்றுள்ளனர். எனினும் நாளை ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுவார்த்தையில் சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மட்டுமே கலந்து கொள்ளவுள்ளார்.

ஜே.வி.பி. சார்பில் அதன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, அநுரா திசநாயக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 1500 பேருடன் தலைவரின் நேரடிப் பார்வையில் உருவாக்கப்பட்டதே சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

### நூல் அறிமுக விழாவில் தளபதி கேணல் பால்ராஜ்

(அலுவலக செய்தியாளர்)

எமது தேசியத் தலைவரின் எண்ணக்கருவிற்கு ஏற்பவும் அவரது செயற்பாடுகளுக்கு ஏற்பவும் செயற்பட்டு எமது போராட்டத்திற்கு வடிவம் கொடுத்த முதல் தாக்குதல் தளபதி என்ற பெருமை சாள்ஸ் அன்ரனியையே சார்கிறது என தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற "நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்" எனும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறி. பிரதிநிதி காரியாலயம் கனடா மொன்றியாவில் திறப்பு

சிறிலங்கா பிரதிநிதி காரியாலயம் கனடாவின் மொன்றியாவில் வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோவினால் ஞாயிறன்று திறந்து வைக்கப்பட்டது. இங்கு வாழும் 30,000 இலங்கையர்களின் தேவையைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

30.09.2003 அன்று கிளிநொச்சி அன்னை திரேசா தேவாலயத்தில் சாள்ஸ் ஞைல்ஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பேக் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3813)

### ஆராதனா ஒலிப்பதிவு

கௌரிக்காப்பு பாடல்கள், கந்தசஷ்டி கவசம், பக்தி கீதங்கள், புதிய திரை இசைக்கதம்பங்கள், பழைய பாடல்கள், ஒலிச்சித்திரங்களும் ஒலிநாடா உடன் பெற்றுக் கொள்ள.... யாழ். ஒளிபுகைப்படக் கலையகம், டிப்போச் சந்தி, யாழ். அருவி குளிரகம், கிளிநொச்சி. ஆராதனா ஒலிப்பதிவு, வவுனியா. (3812)

## மூன்றாண்டு நினைவலைகள்

பிறப்பு 12 07 1976



வீரச்சாவு 04 10 2000

### கப்டன் சரவணா

**[பசுபதி உதயதாரணி]**

இல.111, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.

**திதி - 02.10.2003**

மணம் பல மாண்புடன் பரப்பி
மாநிலம் போற்றிட வாழ்ந்து
இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்று நற்பணிகள் காத்த
எம் இனிய மகளே......
மூன்றாண்டு நினைவஞ்சலியை
கண்ணீர்ப் பூக்களால் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்,
போராளிகள்.

(சி-8631)

## பரீட்சை முடிவுகள் அனுப்பிவைப்பு

வட.இ.ச. சபைப் பரீட்சை முடிவுகள்-2003 தேர்வுநாடிகளின் சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன இப் பரீட்சைக்கு 8116 தேர்வுநாடிகள் விண்ணப்பித்து 5845 பேர் பரீட்சைக்குத் தோற்றி 4884 பேர் சித்தியடைந்துள்ளார்கள்.

## மக்கள் சந்திப்பு

கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட மக்களுடனான சந்திப்பு நேற்றுக் காலை 10.00 மணிக்கு கௌதாரிமுனையில் இடம்பெற்றது. இந் நிகழ்வை அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன் கலந்து சிறப்பித்தார்.

## நியமனம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு கோரி யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்று யாழ். அரச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் ஊடாக யாழ். மாவட்ட உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத் தலைவர் தர்மகுமார் இம்மகஜரை யாழ். அரச அதிபர் பத்மநாதனிடம் கையளித்துள்ளார். தற்போது உடற்கல்வி டிப்ளோமாப் பட்டத்திற்கான 350 மேற்பட்ட போதனாசிரியர்கள் தேவையாக உள்ள போதும் இத் துறையிலுள்ள பட்டதாரிகள் இன்னமும் வேலை வாய்ப்பற்றவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இது தொடர்பாக கவனம் செலுத்தி, துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இம்மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (33)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



லெப். கேணல்

### தில்லையழகன்/தில்லை

க. அருந்தவராஜன்

பிறப்பு - 02-10-1972

வீரச்சாவு - 02-10-2000

*பாசத்தின் உறைவிடமாக எங்கள் இதயத்தில்*
*என்றும் நிழல் உருவாய் நிற்பாய் அண்ணா*
*தமிழீழ தேசத்தின் வித்தாக ஈழத்திற்காய்*
*புகழ் சேர்த்தாய் உனை என்றும் மறவோம்.*

சகோதரன்
போராளி அன்பழகன்

## வட. இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் — 2004

வட.இ.ச. சபையின் 2004ம் ஆண்டு பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 2003.09.30 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா 25.

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெற விரும்பும் தேர்வுநாடிகள் ரூபா25 பெறுமதியான காசுக்கட்டளை (MONEY ORDER) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபால்தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ, 22செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

தேர்வுநாடி ஒருவர் ஒருபடிவத்தில் ஒருபாடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களிற்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பமும் காசுக்கட்டளையும் அனுப்ப கடமைப்பட்டுள்ளார்கள். ஒன்றிற்கு மேற்பட்ட பாடத்திற்கு ஒரேவிண்ணப்பத்தில் விண்ணப்பித்தால் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

காசுக்கட்டளைகள் வட.இ.ச. சபை என்ற பெயரில் பெறப்பட்டு யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.

### பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1) வட இலங்கை சங்கீதசபை, யாழ் கல்வி வலயம், செம்மணி வீதி, யாழ்ப்பாணம். | 2) திருமதி.சி.தவமணிதாசன், விவேகானந்தா ம.வி, புதுச் செட்டித் தெரு, கொழும்பு - 13. | 3) திருமதி.ட. முருகுப்பிள்ளை, பிரதிக்கல்விப் பணிப்பாளர்,(சங்கீதம்) கல்வித்திணைக்களம், திருகோணமலை. |
| 17, கனல் வீதி, வெள்ளவத்தை, தொலைபேசி. இல அலுவலகம்.012-431120 இல்லம். 012-364548 | 4) செல்வி. ந. நடராசா உதவிக்கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்) கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு. | 5) திருமதி.த.விஸ்வநாதன், ஆசிரிய ஆலோசகர், கல்முனைக்கல்வி வலயம், கல்முனை. |
| 6) கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்களம், மன்னார். | 7) திரு.வி. கணேசராசா, கோட்டக்கல்வி அதிகாரி, வவுனியா தெற்கு கல்விக்கோட்டம், வவுனியா. தொலை பேசி இல. அலுவலகம் 024-2222373 இல்லம் -024-2220684 | |

என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்பமுடிவுத் திகதி 03.12.2003 ஆகும்.*

(சி.8284)

# பிரிட்டனில் சட்டவிரோத குடியேறிகள் மிகமோசமாக நடத்தப்படுகின்றனர்

## சிறைச்சாலைஅதிகாரி தகவல்

(லண்டன்)

பிரிட்டனில் சட்டவிரோத குடியேற்றதாரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களில் அவர்கள் மிக மோசமாக நடத்தப்படுகின்றனர் என பிரிட்டிஷ் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு அருகில் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்களைத் தடுத்து வைக்கும் நிலையமொன்றுள்ளது. இங்கு போதியவசதிகள் எதுவும் இல்லை. தேவையான அளவிற்கு அதிகாரிகளும் இல்லை. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான பாதுகாப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

அத்துடன் வன்செயல்கள் அடிக்கடி நிகழ்கின்றன. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தப்பிப்போக எத்தனித்த சந்தர்ப்பங்களும் உண்டு. 3000 பேர் மட்டும் இருக்கக் கூடிய இந்நிலையத்தில் 12,000 பேர் உள்ளனர். இவ்வாறு நிலையத்தைப் பார்வையிட்ட பிரிட்டிஷ் சிறைச்சாலை அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

## ஆர்ப்பாட்டம்

பொலிவியாவில் "வறுமை ஒழிக்கப்பட வேண்டும்" எனக் கூறி ஆசிரியர்களும் தொழிலாளர்களும் நடைபாதை வியாபாரிகளும் ஆர்ப்பாட்டங்களை நடத்தயுள்ளனர். ஏற்கனவே இந்நாட்டில் இருவாரங்களாக வேலை நிறுத்தம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தினமும் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல் நடத்தும் ஈராக்கியர்கள் மறைந்திருக்கும் இடமாகக் கருதப்படும் சிரியா எல்லையிலிருக்கும் ஈராக் பிரதேசத்துள் சென்றுவரும் வாகனங்கள்.

## ஆதரவு சரிகிறது

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரின் செல்வாக்கு ஆகக் கீழ் மட்டத்திற்கு இறங்கியுள்ளதாகக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

டெய்லி டெலிகிராப் பத்திரிகை 2300 பேர்களிடம் கணிப்பீடொன்றை நடத்தியுள்ளது. 74 சதவீதமானவர்கள் ரொனிப் பிளேயரின் அரசியல் கொள்கைகளுக்கு எதிராகக் கருத்துக் கூறி யுள்ளார்கள்.

# லைபீரியாவில் மோதல்கள் வெடிக்கும் அபாயம்; அதிகாரிகளை வெளியேற அமெரிக்கா பணிப்பு!



ரஷ்யாவின் இரண்டாவது பெரிய நகரமான பீட்டர்ஸ் பேர்க் நகரம் ஸ்தாபிக்கப்பட்ட 300வது வருடக் கொண்டாட்டத்தின் போது நேவா ஆற்றில் ஓடுதல் என்ற நிகழ்வில் கலந்து கொள்ளும் சிறுவன்.

**லைபீரியாவில் மீண்டும் மோதல்கள் நடைபெறக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டு வருவதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து அமெரிக்கா சிலமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.**

அமெரிக்க வெளிவிவகார திணைக்களம் தகவல் தருகையில், தலைநகர் மொன்ரோவியாவில் மேற்காபிரிக்க நாடுகளின் அமைதிப்படையின் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள போதிலும் அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் தாக்குதல்கள் அவ்வப்போது இடம் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளது.

லைபீரியாவின் சில பகுதிகளில் அமைதி நிலை நிலவுவதாக தோன்றினாலும் எவ்வேளையிலும் பாரியளவில் மோதல்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் உருவாகி வருகிறது. இதனை அமெரிக்க வெளிவிவகார திணைக்களம் உறுதிசெய்துள்ளது.

இத்தகைய சூழலில் மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இரண்டாம், மூன்றாம் நிலைகளிலுள்ள ஊழியர்களை வெளியேறுமாறு அமெரிக்கா பணிப்புரை வழங்கியுள்ளது.

லைபீரியா ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் நாட்டின் பெரும் பகுதி கிளர்ச்சியாளர் வசம் வீழ்ந்த நிலையில் அமைதியை ஏற்படுத்த அங்கு மேற்காபிரிக்க அமைதிப்படை போய்ச் சேர்ந்திருந்தது. எனினும் ஆட்சியாளர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இன்னமும் ஓர் இணக்கப்பாடு காணப்படாத நிலையில் மீண்டும் இரத்தக் களறி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரிய அனுவாயுத விவகாரம் மற்றுமொரு சுற்றுப் பேச்சிற்கு முயற்சி

வடகொரியாவின் அணுவாயுத விவகாரம் தொடர்பாக 06 நாடுகள் பங்குபற்றும் மற்றுமோர் சுற்று பேச்சுவார்த்தைகள் அடுத்தமாதம் நடைபெறலாமென அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சரும் வடகொரிய விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான ஜேம்ஸ் கெலி தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய மற்றும் தென்கொரிய வெளிவிவகார அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு டோக்கியோ சென்றுள்ள அவர் ராய்ட்டல் செய்தி ஸ்தாபனத்திற்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் இக் கலந்துரையாடல்களை மீண்டும் விரைவில் நடாத்துமாறு வற்புறுத்துகின்ற போதிலும் சட்டத்திற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை சீன தலைநகரில் அண்மையில் நடைபெற்ற வடகொரிய அணுவாயுத பிரச்சினை தொடர்பான பேச்சுக்களின் போது எவ்வித இணக்கப்பாடும் காணப்படாத நிலையில் முடிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், வடகொரியா தற்போதைய பேச்சிற்கு செவிசாய்க்குமா என்பது சந்தேகமே என தெரிவிக்கப்படுகின்றது.



அத்திலாந்திக்கிலிருந்து வீசிய புயலினால் கிழக்கு கனடா கரையில் ஒதுங்கியுள்ள படகை நோக்கி நடக்கும் பெட் போட் வாசி.

## முதலைக்கு பலி!

பாகிஸ்தான் எல்லையிலுள்ள ஈரான் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த சிறுவனை முதலை ஒன்று உயிரோடு விழுங்கியுள்ளது.

12 வயது சிறுவன் தனது நண்பர்களுடன் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தான். சிறுவர்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்த வேளையில் ஆற்றிலிருந்த 16 அடி நீளமுள்ள முதலை சிறுவனை தாவிப்பாய்ந்து பிடித்து விழுங்கிவிட்டது.

# கடலில் மூழ்கிய நீர் மூழ்கியை மீட்க ரஷ்யா தீவிர முயற்சி

(மொஸ்கோ)

கடலில் மூழ்கியதன் மூலம் ஒன்பது உயிர்களைப் பலிகொண்ட அணுசக்தியில் இயங்கும் ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலை வெளியே எடுக்கும் வேலைகளை ரஷ்யா ஆரம்பிக்கவுள்ளது.

எமது கடலின் அடியில் அணு ஆபத்து இருக்கக்கூடாது. மூழ்கிய கப்பலிலிருந்து அணுக் கசிவுகள் எதுவும் இடம்பெறாவிடினும், அதனை அகற்றிவிடுவதே சிறந்ததாகும் என ரஷ்ய அரசு அறிவித்துள்ளது. ஆனால் நீர் மூழ்கியை வெளியில் கொண்டுவரும் விதம் பற்றி ரஷ்யா இதுவரை அறிவிக்கவில்லை. ஆகஸ்ட் 30 ஆம் திகதி k.159 என்ற ரஷ்ய நீர் மூழ்கி கடலில் மூழ்கியமை தெரிந்ததே. இதில் ஒருவர் மட்டுமே உயிர்தப்பியமை குறிப்பிடத்தக்கது.


# பயங்கரவாதத்தை நிறுத்த அமெரிக்கா வலியுறுத்தும்

*- றிச்சட் பௌச்சர் கூறுகிறார்*

(வாஷங்டன்)

ஜம்மு-காஷ்மீரில் எல்லைக் கப்பாலிருந்து வரும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பிடம் அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் றிச்சட் பௌச்சர் வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு துணையமைச்சர் றிச்சட் ஆர்மிரேச் மற்றும் வெளியுறவுத் துறை உதவி அமைச்சர் ஹிர்த்தினா றோகா ஆகியோர் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உட்பட 5 நாடுகளில் சுற்றுப் பயணம் இன்று மேற்கொள்ளவுள்ள நிலையில பௌச்சர் இதனைக் கூறியுள்ளார்.



தமது பாரம்பரிய படகு மூலம் பூசணிக்காய்களை களியாட்ட நிகழ்வு ஒன்றுக்கு கொண்டு செல்லும் ஸ்விடிஷ் நாட்டு விவசாயி.

# மீள உயிர்பெறத்துடிக்கும் ஒதியமலைக் கிராமம்



மணலாறின் ஒதியமலைக் கிராமத்தின் செழிப்பான வாழ்வு அதன் கலகலப்பு, சிறப்பு என்பன அனைத்தும் 1985ஆம் ஆண்டுடன் சிங்களப் படைகளால் ஒழிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமத்தில் தமது சொந்த நிலத்தில் இருந்து விரட்டப்பட்டு 18ஆண்டுகள் கழிந்துவிட்டது. செழிப்பாகவும், வளமாகவும் வாழ்ந்த மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு ஏதிலிகள் ஆக்கப்பட்டனர். அவர்களது உறவினர்கள், பிள்ளைகள் குதறப்பட்ட பெரும் துயரமான சம்பவம் இப்பகுதி மக்களின் மனங்களில் இப்போதும் குடிகொண்டுள்ளது. அகதி வாழ்வின் அத்தியாயங்கள் இவர்களின் வாழ்வில் அழியாத வடுவாக மாறியுள்ளது. ஒதியமலைக் கிராமம் தற்போது பெரும் பற்றைகளாகவே காட்சி தருகின்றது. ஆங்காங்கே மக்கள் பற்றைகளை வெட்டிக்கொண்டிருந்தனர்.



அவ்வாறு தனது காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த ஒரு முதியவரின் அருகில் சென்று அவருடன் உரையாடினோம்.

ஐயா இது உங்களுடைய காணியா? எனக் கேட்டேன். அதற்கு அந்த முதியவர் "ஓம் தம்பி இது தான் என்ர காணி. இதுக்க முந்தி நான் ஒரு பெரிய கல் வீடு கட்டியிருந்தனான். தென்னையளெல்லாம் நட்டிருந்தனான். ஆனா இப்ப ஒண்டையும் காணேலாமக் கிடக்கு. என்ர பெரிய வீடு நான் கஷ்டப்பட்டு கட்டின வீடு. அதில ஒரு வருஷம் தான் இருந்திருப்பம். வந்து கலைச்சாங்கள் எங்களை சிங்களவங்கள். அதோடு போனது தான். நாங்கள் போய் படாத கஷ்டம் எல்லாம் பட்டு இப்ப ஏதோ எங்கட மண்ணுக்கு வந்திட்டம். என்ர வீட்டை இடிச்சுப் போட்டாங்கள். நான் இப்ப இந்தக்குடிசையில இருக்கிறன்" என்று தனது சிறிய குடிசையைக் காட்டினார் மிகவும் சோகத்துடன்.

ஆம் அவ்வாறு தான் அந்த முதியவரின் வீடு மாத்திரமல்ல, அந்தக் கிராமத்தின் அனைவரது வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டு அந்தக் கிராமமே முற்றாக சிதைக்கப்பட்டுள்ளது. அந்த முதியவருடன் கதைத்துவிட்டு சற்றுத் தொலைவில் இருந்த ஒரு சிறிய கல் வீட்டை அடைந்தோம்.

அது இராணுவ முகாமாக இருந்திருக்க வேண்டும். அந்தக் காட்டுக்குள் ஒரு வீடு தனியாக உள்ளது என்றால் அப்படித் தான் அது இராணுவ முகாமே தான். ஏனெனில், அந்த வீட்டைச் சுற்றி இராணுவ பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த வீட்டில் வயது முதிர்ந்தவர்களுடன் இரண்டு இளைஞர்களும் இருந்தார்கள். வீட்டின் வாசலை அடைந்தபோது வீட்டுச் சுவரை நிமிர்ந்து பார்த்தேன். அதில் "ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நாம் ஆயுதம் ஏந்த வேண்டி வந்திராது" என்ற வசனம் எழுதப்பட்டிருந்தது. இவர்கள் ஜெயவர்த்தனா ஆட்சியில் அகதியாக்கப்பட்டிருக்க வேண்டும் என நினைத்தேன். ஆம் அவர்கள் அகதியாக்கப்பட்டிருப்பது மாத்திரமல்ல, அவர்களது கிராமத்தைச் சேர்ந்த உறவினர்கள், பிள்ளைகள், நண்பர்கள் என முப்பதிற்கு மேற்பட்டவர்கள் ஒரே நாளில் சிங்களப் படைகளால் கைது செய்யப்பட்டு ஒரே இடத்தில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டதுடன், இந்த ஜே.ஆரின் ஆட்சியில் தான் என்பது எனக்கு நினைவில் வந்தது.

ஒதியமலை கிராம மக்கள் அகதிகளாக்கபடும்போது அவர்களது சொத்துக்கள் பறிக்கப்படும் போது, அவர்களது உயிர்கள் பறிக்கப்படும்போது இவர்களுக்கு நான்கு, ஐந்து வயது தான் இருந்திருக்கும். எதுவுமே அறியாத பாலகர்கள். இப்போது அந்த இடத்தைப் பார்க்கும்போது அந்த மக்களின் உணர்வுகளைப் பகிரும்போது எனக்குப் புல்லரித்தது. அன்று இத்தனை துயரங்களை அடைந்த இந்த மக்களின் நிலங்கள் மீண்டும் 18 வருடங்களின் பின்னர் மீட்கப்பட்டபோதும் அவர்களின் கிராமம் வேகமாகக் கட்டியெழுப்பப்படக்கூடிய நிலை இல்லை. இந்த மக்களின் எதிர்காலச் சந்ததியின் சிறந்த வாழ்விற்கு கல்வி போதிப்பதற்கு ஒரு சீரான பாடசாலை இல்லை. மக்களின் தேவைகளைப் பெறுவதற்கும், செய்கை பண்ணப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கும் சந்தைகள் இல்லை. அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் வாழ்ந்து வருகின்ற இந்த மக்களுக்கு மருத்துவமனை இல்லை. மருத்துவமனைக்குச் செல்வதானால், ஒரு நாள் செலவு செய்து பல மைல்களுக்கப்பால் செல்ல வேண்டிய நிலை. அதற்கும் வாகன வசதிகள் இல்லை. மலசல கூடங்கள் இல்லை. கடைகள் இல்லை. இத்தகைய அடிப்படை வசதிகள் வரும் வரை பெருமளவான மக்கள் மீள்குடியமராது உள்ளனர். இவர்களுக்கான மீள்குடியமர்வு நிதி வழங்குவதற்கான எந்தவித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை. தமக்கு இத்தகைய வசதிகள் எப்போது கிடைக்கும் என தினமும் எதிர்பார்ப்புடனேயே வாழ்கின்றனர்.

**லோகீசன்**





# உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம்; தமிழ்க் கூட்டமைப்பு கடும் நிலைப்பாடு

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்புப் பகுதிகளில் மக்களை மீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கடுமையான நிலைப்பாட்டினை எடுக்கவுள்ளது என்று அகில இலங்கைதமிழ்க் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

இவ்விடயத்தில் கூட்டமைப்பு கடுமையான நிலைப்பாட்டினை எடுக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சமாதான முயற்சி நடைபெற்று வருகின்ற வேளையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் வீழ்த்துவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுமதிக்காது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே நாட்டில்சமாதானத்தை ஏற்படுத்த முனைகின்றது. இந்த அரசாங்கம் கவிழ்ந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி ஏற்படுமானால் அது மீண்டும் யுத்தத்திற்கே வழி வகுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# விசர் நாயால் கடியுண்ட சிறுவன் பரிதாப மரணம்

(மல்லாவி)

விசர்நாய்க் கடிக்கிலக்கான சிறுவனொருவர் நேற்று முன்தினம் மல்லாவி வைத்தியசாலையில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

துணுக்காய்ப் பிரதேச தேறாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த ஜெயகநாதன் கனகராசா (வயது-15) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

பாடசாலை முடிந்து நண்பகல் வீதி திரும்பிக் கொண்டிருந்தவேளை வழியில் கிடந்த விசர் நாயின் கடிக்கு இலக்கானார். பின்னர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இவர் சில மாதங்களுக்கு முன்பும் நாய்க் கடிக்கு இலக்காகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (24)

# ஈராக் குறித்த ரணிலின் கருத்திற்குப் பலத்த கண்டனம்

(கொழும்பு)

அமெரிக்கா தலைமையிலான ஈராக் மீதான முற்றுகைக்கு சிறிலங்கா ஆதரவளிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த கருத்திற்குப்பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

ஐ.நா. சபையின் 58 ஆவது கூட்டத்தொடரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றும் போது இதனைத் தெரிவித்திருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உட்பட கொழும்பு ஊடகங்கள் சிலவும் விசனம் தெரிவித்துள்ளன.

அத்துடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவாக பிரதமர் ரணில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

# யாழ். இந்துக் கல்லூரியில் சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் நிலை தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் மாலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கருத்தரங்கு பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் சகாயசீலன் கலந்து கொண்டு தற்கால அரசியல் நிலை பற்றி கருத்துரை வழங்கினார். பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள், பொது நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட பல தரப்பட்டவர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

# மாட்டுவண்டிச் சவாரி

(அலுவலக செய்தியாளர்)

மழை காரணமாக கடந்த 28ம் திகதியன்று இடை நிறுத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 4ம் திகதி வட்டக்கச்சி கலைவாணி மாட்டுவண்டி சவாரித்திடலில் பி.ப 1.00 மணிக்கு நடைபெறவுள்ளதென கிளிநொச்சி விளையாட்டுத்துறை அதிகாரி வே.சிவநேசன் தெரிவித்துள்ளார். (சோ)

# அடிப்படை வசதிகளின்றி அவதியுறும் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம்

(வவுனியா)

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

பூந்தோட்டம் பகுதியில் உள்ள இப்பாடசாலையில் இடம்பெயர்ந்து பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் உள்ள மாணவர்களே பெருமளவில் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் உள்ள 510 மாணவர்களுக்கு 17 ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர்.

இங்கு ஆரம்பக் கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாக உள்ளது. மேலும் உடற்கல்வி, இரண்டாம்மொழி ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்களே இல்லை. இதனால், மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாத அவலநிலை காணப்படுகின்றது.

மாணவர்களின் கற்றலுக்கு தேவையான அடிப்படை வசதிகளான விஞ்ஞான கூடம், மனையியல் கூடம், செயற்பாட்டறை போன்றவையும் இப்பாடசாலையில் இல்லை. இதனால் இப்பாடசாலை மாணவர்கள் கற்றலில் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடுவதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (10)

# அழிந்துபோன பனை வளத்தை மீளக் கட்டியெழுப்ப இக்காலப் பகுதியை அனைவரும் பயன்படுத்துக!

## வ.ப.தெ.வ.அ.கூ.நி. பேரிணையம் அழைப்பு

**எமது தாயக நிலத்தில் அழிந்துபோன பனை வளத்தை மீளக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும். இக்காலப் பகுதியில் ஒவ்வொருவரும் பத்து பனம் விதைகளை நடுகை செய்ய வேண்டும் என்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவன பேரிணையம் அழைப்பு விடுத்துள்ளது.**

இது தொடர்பாக பேரிணையம் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழீழ நிலப்பரப்பில் பரந்து வளர்ந்து வியாபித்திருந்த பனை வளம் தமிழரின் சின்னமாகவும், மிகப் பிரதானமான பணப் பயிராகவும் காணப்படுகின்றது. இவ்வளம் கடந்த காலப் போர்ச் சூழலால் இலட்சக் கணக்கில் அழிக்கப்பட்டதுடன், தற்போதும் தமிழர் தாயக நிலப்பரப்பில் ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவம் தொடர்ந்தும் பயன்தரு பனை மரங்களை தமது காவல் அரண்களுக்கும், வேலி அமைப்பதற்கும், புதிய முகாம்களை அமைப்பதற்காகவும் அழித்து வருகின்றது. இந்நடவடிக்கைகளைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சுக்கு எமது நிறுவனத்தால் தகவல்கள் வழங்கியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், அழிக்கப்பட்ட 25 இலட்சத்திற்கும் அதிகமான பனை மரங்களை மீள் நடுகை மூலம் எதிர்கால சந்ததிக்கு வளர்த்து மருத்துவ தன்மையுடைய பனம் பண்டங்களைப் பெற்று வலுவுள்ள தமிழ் சமூகம் ஒன்றை உருவாக்க நாம் நீண்ட கால சிந்தனையுடன் செயற்பட வேண்டியதுடன், இவ்வளங்களையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் எதிர்காலத்தில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்து அந்நிய செலாவணியை எமது தாயகம் மீதப்படுத்த வேண்டிய அவசியத்தையும் நாம் அனைவரும் உணர்ந்து செயற்படுதல் காலத்தின் தேவை என்பதை அறிவோம்.

எனவே, இக்காலம் பனம் பழம் கிடைக்கும் நற்காலம். இப்பனம் பழத்தை உணவுக்குப் பயன்படுத்துவதோடல்லாமல், தாயக நிலப்பரப்பில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் பத்து பனம் விதைகளை நடுகை செய்ய முன்வருவதுடன் பாடசாலை மாணவர்கள் ஊடாகவும், கிராம அபிவிருத்தி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் அனைத்தும் இக்காலத்தைப் பயன்படுத்தி பனம் விதை நடுகைக்கு முக்கியத்துவம் வழங்கி வளப் பாதுகாப்பிற்கு வழி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரச சார்பான நிறுவனமான பனை அபிவிருத்திச் சபை இந்நடவடிக்கைக்கு கூடுதல் அரச நிதியைப் பெற்று பனம் விதை நடுகையை அதிகரிப்பதுடன் ஏற்கனவே நடுகை செய்த நிலங்களையும் பராமரித்து எதிர்கால வளத்தைப் பெருக்க உறுதுணை புரிய வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

## கிளை திறப்பு

(ஒட்டுசுட்டான்)

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க கரிப்பட்டமுறிப்பு கிளைதிறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று பிற்பகல் 1.00 மணியளவில் மாங்குளம் பிரதேசப் பொறுப்பாளரின் தலைமையில் நடந்த மேற்படி நிகழ்வில் நாடாவினை வெட்டிகூட்டுறவு சங்க உபதலைவர் கணபதிப்பிள்ளை திறந்து வைத்தார்.

இச்சங்கம் ஜெயசிக்குறு நடவடிக்கையில் இடம்பெயர்ந்து பழைய கட்டடத்தில் தற்போது இயங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## யாழ். மாவட்ட பெண்களின் சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பெண்கள் சங்கம நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிரமைப்பு, யாழ். மாவட்ட நலன் பேணும் அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நிகழ்வில் சமகாலப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## யோகபுரம் மகாவித்தியாலயம் நாடகப்போட்டியில் முதலாமிடம்

(ஒட்டுசுட்டான்)

சிறுவர்தினத்தைமுன்னிட்டு துணுக்காய் வலய பாடசாலைகளுக்கிடையே சிறுவர்களுக்கான நாடகப் போட்டி நடைபெற்றது.

கடந்த திங்கட்கிழமை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படிவலய பாடசாலைகளுக்கிடையேயான சிறுவர்களுக்கான நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை யோகபுரம்மகாவித்தியாலய மாணவர்களும் இரண்டாம் இடத்தை கூழாமுறிப்பு பாடசாலை மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். (05)

## மீன்பிடித்துறை வளர்ச்சி பெறாமைக்கு படையினரின் தடைகளே காரணம்

### பேராதனை பல்கலை.பேராசிரியர் சின்னத்தம்பி

வடக்கு-கிழக்கில் மீன்பிடி தொழிலுக்கு தற்போதும் தடைகள் இருக்கின்றன. சுதந்திரமாக தொழில் செய்ய முடியாதுள்ளது. இதனாலேயே மீன்பிடித்துறை இவ்வாண்டில் வளர்ச்சியடைய முடியவில்லை என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறைப் பேராசிரியர் சின்னத்தம்பி கூறியுள்ளார்.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 5.6 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளபோதும், மீன்பிடித் துறையில் வளர்ச்சி காணப்படவில்லை. இது ஏன் என்று கேட்டபோதே பேராசிரியர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கில் தற்போதும் சுற்றுலாத்துறை வளர்ச்சியடையாமலேயே உள்ளது. ஏனென்றால் அப்பகுதியில் இப்போதும் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மக்கள் தங்களுடைய சாதாரண வாழ்க்கையை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது.

விவசாயத்துறையின் வீழ்ச்சிக்கு நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியும் காரணமாகும் என்றார்.

## தேசிய மட்ட தமிழ்மொழித்தின போட்டி திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

கல்வி மனித வள அபிவிருத்தி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு இவ்வாண்டிற்கான அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளை அக்டோபர் மாதம் 09ஆம், 10ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளது.

அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளர் நல்லதம்பி நடராஜா இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

போட்டிகள் யாவும் கொழும்பு - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்துக் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் தெரிவான பேச்சு, வாசிப்பு, இசை, நடனம், தமிழறிவு, வினாவிடை, வில்லுப் பாட்டு, நாடகம் என்பன இங்கு இடம்பெறவுள்ளது.

சிங்கள மாணவர்களுக்கான போட்டிகளும் இப்பாடசாலைகளிலேயே நடைபெறவுள்ளது.

## யாழ்.இல் மீள்குடியேறிய மக்கள் மீது சிறிலங்காப் படை கெடுபிடி அதிகரிப்பு

### கல் வீடுகள் அமைக்கவும் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வளலாய், கதிரிப்பாய் பகுதிகளில் மீள்குடியேறிய மக்கள் மீது சிறிலங்காப் படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் வீட்டினை சிமெந்தினால் கட்டுவதற்குப் படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது. இதைவிட படையினரின் அனுமதியின்றி கட்டப்பட்ட வீடொன்று படையினரால் இடிக்கப்பட்டுள்ளது. ஓலைக்குடிசைகளை மட்டும் இங்கு அமைக்க முடியும் எனப் படைத்தரப்பு கூறியுள்ளது.

இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் என்று யாழ். மாநகர முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் குற்றம் சாட்டியுள்ளார்.

## அமெ. ராஜதந்திரிகள் குழு சிறிலங்காவிற்கு வருகை

(லண்டன்)

அமெரிக்க இராஜதந்திரிகள் குழு ஒன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த விவகாரம் குறித்து நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடனான சந்திப்பின் போதும் பிரதமர் ரணில் விவாதித்துள்ளார்.

## இடிமின்னலுடன் பெருமழை மீன்பிடி படகுகள் சேதம்

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு பகுதியில் இடி மின்னலுடனும் கடும் காற்றுடனும் மழை பெய்தமையினால் நன்னீர் மீன்படகுகளும் வலைகளும் பயன் தரும் மரங்களும் சேதமடைந்துள்ளன. கடந்த சனியன்று அன்று கடும் காற்றுடனும் இடி மின்னலுடனும் பெய்த மழையினால் பயன் தரும் மரங்களும் நன்னீர் மீன்பிடி படகுகள், வலைகள் என்பன முற்றாகவும் பகுதியாகவும் பாதிப்படைந்துள்ளதுடன் தேக்கு மரங்கள் சரிந்து வீடுகளின் மேலும் விழுந்துள்ளன.

அதிவீரமுத்து மகாதேவன்,ஜெகநாதப்பிள்ளை இராஜேஸ்வரன் ஆகியோரது மீன்பிடி படகுகளும் வலைகளும் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பசுபதி கேந்திரராசா, நடராசகண்ணன் ஆகியோரின் படகுகள் வலைகளும் சிறிது சேதமடைந்துள்ளன. (05)

## மக்களின் இயல்பு வாழ்விற்கு உதவிகள் செய்யப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-ஏறாவூர் நாலாம் குறிச்சி கிராம மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்ந்து வருகின்ற போதிலும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் இடம் பெற்ற வன் செயல்களினைத் தொடர்ந்து இக் கிராமம் முற்றாகப் பாதிக்கப்பட்டது. சேதமாக்கப்பட்ட வீடுகள் வர்த்தக நிலையங்களை மீள அமைக்க எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

## மேற்குலக நாடுகளுடன் முரண்படாது கொள்கைகளை வகுக்க குழு அமைப்பு

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடிக்க சிறிலங்கா அரசினால் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் தங்கியிருந்த நாட்களில் இதற்கான முயற்சிகளில் மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றுடன் முரண்படாத வகையில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிய வருகிறது. இதனூடாக சிறிலங்காவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நாடுகளுக்கிடையே ஒரு உள்ளக பிணைப்பை ஏற்படுத்தவும் சிறிலங்கா அரசு முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து சர்வதேச இராஜதந்திரிகளுடன் பிரதமர் ரணில் விவாதித்தபோது நியூசிலாந்து, போர்த்துக்கல், கானா, கட்டார், நோர்வே, சிங்கப்பூர் போன்ற நாடுகள் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாண சபை.
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் [நீகோட் ]
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆ.அ.வ" கடன் இல. 1846-சிறீ (எஸ்எவ்)

# கேள்வி கோரல்-இல.24

## சமையல் அறை உபகரணங்கள் கொள்வனவு

1.வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆ. அ.வ)கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சமையல் அறை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இக்கடனின் வரும் படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORDஇ கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

### தொகுதி I

| பொருட்களின் விபரம் | தேவையான அளவு | அளவுப் பிரமாணம் |
|---|---|---|
| i.அலுமினியப் பானை மூடியுடன் சமையலுக்குரியது | 96 | 600மிமீ விட்டம் x350 மிமீ ஆழம்,30 கிலோ அரிசி அவியக் கூடியது |
| II.அலுமினியப் பானை மூடியுடன் சமையலுக்குரியது | 96 | 400 மிமீ விட்டம் x300 மிமீ ஆழம் 15கிலோ அரிசி அவியக் கூடியது |
| III. பொரிக்கும் தாச்சி [சீனச்சட்டி] | 96 | 350 மிமீ விட்டம் |
| IV.அலுமனியக்கரண்டி [கைபிடியுள்ளது] | 96 | 150 மிமீ விட்டமுள்ள கரண்டி நீள் வட்ட அல்லது வட்ட வடிவமானது. 900 மிமீ நீளமான துளாவக் கூடிய அலுமினியக் கைபிடியின் நுனியில் மரத்திலான கைப்பிடி இருத்தல்வேண்டும். |
| V. அலுமினியக் கரண்டி | 96 | 50 மிமீவிட்டமுள்ள கரண்டி நீள் வட்ட அல்லது வட்ட வடிவமானது. 450 மிமீநீளமான துளாவக் கூடிய அலுமினியக் கைபிடியின் நுனியில் மரத்திலான கைப்பிடி இருத்தல் வேண்டும். |
| VI. அலுமினியக்கிண்ணம் [பெரிது] கைபிடி உள்ளது | 96 | 375மிமீ உயரம் 150 மிமீ விட்டம் |
| VII.மரக்கறிவெட்டும் கத்தி | 384 (96x4) | கறையில் உருக்கிலானது. ஒவ்வொன்றும் 100மிமீ 150 மிமீ,175 மிமீ,200மிமீஅளவிலானவை. |
| VIII. கறையில் உருக்கிலான வாயகன்ற கிண்ணமும் அலுமினிய மேசைக் கரண்டியும். | 17,215 | WFP, NECORD சின்னம் பொறிக்கப்பட்டது. [மாதிரி கேள்வி கோருவோர் கூட்டத்தில் வழங்கப்படும்] |

### தொகுதி II

| பொருட்களின் விபரம் | தேவையான அளவு | அளவுப் பிரமாணம் |
|---|---|---|
| I.பிளாஸ்டிக் வாளி [கைபிடி மூடியுடன்] | 96 | 30 லீட்டர் கொள்ளளவு |
| II. பிளாஸ்டிக் பரல் [கைபிடி, மூடியுடன்] [உணவைப் பாதுகாக்க] | 192 | 30 லீட்டர் கொள்ளளவு |
| III கதிரை | 192 | 60 கிலோ அரிசி கொள்ளக்கூடியது |
| IVதைக்கப்பட்ட பிளாஸ்டிக் ஏப்ரன் துண்டு [றுகு சின்னம் பொறிக்கப்பட்டது. | 96 | பிளாஸ்டிக்கிலான கைப்பிடியுள்ள கதிரை கால்களின் உயரம் 450 மிமீ இருக்கைகளின் ஆகக் குறைந்த அளவு 400மிமீxமிமீ[மாதிரி கேள்வி |
| IV.தைக்கப்பட்ட பிளாஸ்டிக் ஏப்ரன் துண்டு [WF சின்னம் பொறிக்கப்பட்டது]. | 96 | மாதிரி கேள்வி கோருவோர் கூட்டத்தில் வழங்கப்படும். |

### தொகுதி III

| பொருட்களின் விபரம் | தேவையான அளவு | அளவுப் பிரமாணம் |
|---|---|---|
| I. தேங்காய் துருவி | 192 | மரத்திலானது |
| II. தேங்காய் உடைக்கும் கத்தி | 96 | பொருத்தமான அளவில் |
| III.உரல் | 96 | வெளி விட்டம் 300மிமீ உள்விட்டம் 175 மிமீ ஆழம் 175மிமீ உயரம் 450மிமீ [வேம்பு , முதிரை அல்லது, கல்லுரல்] |
| IV. உலக்கை | 96 | விட்டம் 50 மிமீ நீளம் 1500மிமீ இரும்பு வளையம் இரு பக்கங்களிலும் இருக்கவேண்டும் முதிரை, பூவரசு அல்லது வேம்பு மரத்திலானது. |
| V.மேசை | 96 | மரத்திலான செவ்வக மேசை [வேம்பு. முதிரை அல்லது பனா விசேட தரத்திலான மரத்தினால் செய்யப்பட்டது] [உணவு தயாரிப்பதற்கும், பரிமாறுவதற்கும் ] நீளம் 1500மிமீ அகலம் 900மிமீ தடிப்பு 45 மிமீ உயரம் 750 மிமீ கால் நீளம் 75 மிமீ கால் தடிப்பு 75மிமீx75மிமீ |

### தொகுதி IV

| பொருட்களின் விபரம் | தேவையான அளவு | அளவுப் பிரமாணம் |
|---|---|---|
| I. அளவுத்தராசு | 96 | [0கிலோ-10கிலோ] நிறுக்கக்கூடியது] |

3. தொகுதி இலக்கம் தெளிவாக கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். ஒவ்வொரு தொகுதியும் தனித்தனி கடித உறையில் அனுப்பப்படவேண்டும்.

4. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச்சபை NECORD 140,மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 2003 ஒக்டோபர் 14 ஆம்திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

5. முன்கூட்டியே கேள்வி கோருவோர் கூட்டமொன்று 2003 ஒக்டோபர் 7ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் கேள்வி கோருவோரால் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படும்.

6.கேள்விகளின் தயாரிப்பிற்கு அல்லது ஒப்படைப்பிற்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

7. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான பொருட்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

**த. லங்காநேசன்**
**திட்டப் பணிப்பாளர்**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)**
**திருகோணமலை.**

(சி-8627)



சிந்தனைக்கு

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடு களை இந்த மண் ஒருபொழுதும் சுமந்து கொள்ளாது என்பதை, எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-10-2003

## மீண்டும் கூட்டுக்கு முயற்சி

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் கூட்டை ஏற்படுத்துவதற்கு மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கூட்டு இப்போதைக்கு இல்லை என கடந்த மாதமுற்பகுதியில் சிறிலங்கா சனாதிபதியால் அறிவிக்கப்பட்ட போது நிறுத்தப்பட்ட முயற்சிகள் அநேகமாக நாளை ஆரம்பிக்கப் படலாம்.

இதற்கென மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐவர் குழுவொன்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

செப்ரெம்பர் மாத இறுதிக்குள் பாரியமாற்றமொன்றுக்குத் தயாராகுமாறு தனது கட்சியினருக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய அதேவேளை செப்ரெம்பர் மாதத்துக்குள் கூட்டு இறுதி செய்யப்பட்டுவிடும் எனவும் அவர் ஜே.வி.பி.யுடன் இணக்கம் கண்டிருந்தார். ஆனால் மாதம் முடிவடைந்து விட்டது. இரண்டுமே நடைபெறவில்லை.

ஆனால் கடந்த மாதத்தில் இருபெரும் தோல்விகள் அல்லது பின்னடைவுகள் அவருக்கு ஏற்பட்டன. ஒன்று கடந்த மாதஇறுதியில் நடைபெற்ற ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியா? அல்லது பிரதமரா? என்று எழுந்த சர்ச்சையில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவே என ஐ.நா.பொதுச் செயலாளர் வழங்கிய தீர்ப்பு. இந்த மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டால் உலகளாவிய ரீதியில் அவரது செல்வாக்கு உயர்ந்துவிடும் எனக்கருதி அதற்கு முட்டுக்கட்டைபோட தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் முயற்சி செய்தார் சந்திரிகா. ஆனால் அவரது அவ் அதிகாரத்தின் சக்தி அல்லது பயனற்ற தன்மை மீண்டும் ஒருமுறை நிருபிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, சமாதான முயற்சிகளை ரணில்விக்கிரமசிங்க மேற்கொண்டு வருவதானது அவருக்கு ஐ.நா.மாநாட்டில் உரையாற்ற சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது என்பதும் வெளிப்படுகிறது. இதேவேளை சமாதான முயற்சிகளை விருப்பமின்றியே சனாதிபதி சந்திரிகா ஆதரித்து வருகிறபோதிலும் அதனையே தொடர்ந்தும் செய்துகொண்டிருக்க வேண்டும் என்பதையும் இத்தோல்வி வலியுறுத்துகிறது.

இரண்டாவது பின்னடைவு, ஜே.வி.பி.யுடனான கூட்டு கடந்த மாதத்தில் முடிவு செய்யப்படவில்லை என்பதுடன் இவ்வாறான கூட்டு ஏற்படாமைக்கு சந்திரிகாவின் மீதே அவரது கட்சியினர் பழிசுமத்தினர். ஜே.வி.பி.யுடனான கூட்டு இன்றி தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்பது சு.க.விலுள்ள அனுரா அணியினரின் முடிந்தமுடிவு. இதனடிப்படையில் எவ்வாறாயினும் ஒரு கூட்டை ஏற்படுத்த அவர்கள் பாடுபட்டு வருகின்றனர்.

இந்த முயற்சி அனுரா தலைமையிலான குழுவின் மட்டத்தில் இருந்தவேளை அனைத்தும் சுமுகமானமுறையில் செல்வது போன்றே இருந்தது. அது சனாதிபதி சந்திரிகாவின் முடிவுக்காக வந்தபோதுதான் பிரச்சினைகள் வெளியேவரத்தொடங்கின. சனாதிபதி சந்திரிகாமீது ஜே.வி.பி.யினரும் குறைகூறத் தொடங்கினர். இவ்வாறான ஒருநிலை தோன்றியபின் இக்கூட்டுக் குறித்த பேச்சுவார்த்தையில் ஜே.வி.பி.சலிப்புக்காட்ட தொடங்கியதுடன் ஒருகாலக்கெடுவுக்குள் பேச்சுவார்த்தை முடிவுக்கு வர வேண்டும் எனவும் வலியுறுத்தத்தொடங்கியது.

எனவே பேச்சுவார்த்தை அகாலமாக முடிவுக்கு வந்தது குறித்து சு.க.விலுள்ள கூட்டுக்கு ஆதரவான முக்கியகுழு சந்திரிகாமீது விரக்திகொண்டது. ஒரு கட்டத்தில் "ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேராவிடில் வெற்றிபெற முடியாது" எனக்கூறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை செய்யுமளவுக்கு இருந்தது.

அரசியலமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலொழிய இனிமேல் அதிகாரம்மிக்க பதவி எதனையும் பெறமுடியாத நிலையிலுள்ள சந்திரிகா அம்மையாரால் பலம் வாய்ந்த ஓர் அணியின் இவ்வாறான நெருக்குதலுக்கு பணிந்து போகாதிருக்க முடியாது. அதிலும் பண்டாரநாயக்க குடும்பத்தின் அடுத்த வாரிசு அனுரா பண்டாரநாயக்கவின் எதிர்காலம் ஜே.வி.பி. –சு.க கூட்டிலேயே தங்கியிருப்பதாக அனுரா பூரணமாக நம்புகிறார். கட்சி இம்முறை வெற்றி பெறாவிடினும் கட்சியிலுள்ள தனது எதிரணியாகிய மகிந்தராஜபக்சவை ஓரம்கட்ட இந்தக்கூட்டணியே அவருக்கு ஒரே வழியாக இருக்கிறது.

இப்பொழுது சு.க.விலுள்ள இரண்டு அணிகளும் தெளிவாகத் தெரியுமளவிற்கு சம்பவங்கள் நடைபெறுகின்றன. அனுரா தலைமையிலான குழுவினர் பாதயாத்திரைகள் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களில் முன்வரிசையில் நிற்கின்றனர். அதேவேளை, மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொள்ளாமலும் அதேவேளை, தனித்துவமாக அரசுக்கு எதிரான போராட்டங்கள் என்ற போர்வையில் சமாதானத்திற்கு எதிரான பாதயாத்திரைகள் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அனுரா பண்டாரநாயக்க கூட்டை எவ்வாறேனும் ஏற்படுத்தி விடவேண்டும் என ஜே.வி.பி.யுடன் கூடித் திரிய, கட்சி அமைப்பாளர்களைச் சந்திப்பதிலும் தனித்துவமான கட்சியாக அதனை வளர்ப்பதிலும் மகிந்த ராஜபக்ச ஈடுபட்டு வருகின்றார்.

இதில் சந்திரிகா, ஒரு பக்கத்திற்குச் சார்பான நிலையை எடுக்க வேண்டியவராகவே உள்ளார். இப்பொழுது ஜே.வி.பி.யின் போராட்டங்களில் சு.க.வினர் இணைந்து செயற்படுவதை அவர் தடுக்காத அதேவேளை கூட்டுக்கு ஒரு குழுவையும் நியமித்திருக்கிறார். இது விரும்பியோ விரும்பாமலோ ஜே.வி.பி.யுடனான கூட்டை அவர் ஏற்க வேண்டிய நிலையிலுள்ளதையும் அனுரா பண்டாரநாயக்கவுக்குச் சார்பான நிலையை அவர் எடுத்திருப்பதையும் காட்டுவதாகக் கொள்ளலாம்.

# நாட்டில் இன்று நடக்கும் நாசச் செயல்களை தடுத்து நிறுத்த சிறந்த தலைவர் வேண்டும்

### கெடம்பே ராஜோ பவனாராம தேரர் கருத்து

(கொழும்பு)

"இன்று எமது நாட்டில் நடைபெறுகின்ற நாசச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு முன்வரும் சிறந்த தலைவர் ஒருவர் கிடையாது. தற்போது அராஜகமே நடைபெறுகிறது. ஆகவே நாட்டிற்கும், இனத்திற்கும், மதத்திற்கும்,உளப்பூர்வமாக அன்பு வைக்கும் இனத் தலைவர் ஒருவரின் அவசியம் தற்போது உரையாடப்பட்டுள்ளது" என ஜே.வி.பியினரால் முன்னெடுக்கப்பட்டு தொடரும் தேசாபிமானிகளின் பாதயாத்திரையின் 3ம் நாள் நிறைவின் போது நிட்டம் புவவில் நடைபெற்ற கூட்டத்தில்உரையாற்றிய கெடம்பே ராஜோ பவனா ராம அதிபதி என்ற பௌத்த பிக்குகூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றும் போது இன்று இந் நாட்டில் அரசாங்கம் என்று ஒன்று இல்லை எனவும் நோர்வே அரசு புலிகளுக்கு வேண்டிய வாறே செயற்பட்டே நிர்வாகம் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பிராதன இரு கட்சிகளான ஐ.தே. கவும், பொ.ஐ முன்னணியும் ஒரே கொள்கையையே கடைப்பிடிக்கின்றன. நாட்டில் உள்ள பிரச்சினை என்ன என்பதை அவை இன்னும் உணராமல் இருக்கின்றன.இவ்விரு கட்சிகளும் இணைந்தால் நாடு பெரும் அழிவை சந்திக்கும். ஆகவே நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் தேசாபிமான தலைவர் ஒருவரை உருவாக்குவது தேசப் பற்றுள்ள அனைவரினதும் கடமையாகும் எனவும் மேற்படி பிக்கு கூறியுள்ளார்

# ஜே.வி.பீ. தன் கொள்கைகளைக் கைவிட்டு போர், இனவாதத்திற்குள் நுழைந்துள்ளது

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

(கொழும்பு)

ஜே.வி.பி. இப்பொழுது ஏகாதிபத்திய எதிர்ப்பு இடது சாரிக்கொள்கைகளை கைவிட்டு போர் மற்றும் இனவாதத்திற்குள் பிரவேசித்துள்ளது. சனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

அவிசாவளையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.யிடம் சிங்கக் கொடி மட்டுமன்றி இனவாதமும் போர் வாதமும் எஞ்சியுள்ளது,

இதனால் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளையே எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# ஆளும் கட்சி பின்வரிசை உறுப்பினர்களுக்கு சமாதான முயற்சி குறித்து விளக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஐ.தே.கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு "சமாதான நடவடிக்கைகள்" என்பது பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 5ம்.6ம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கின் போது சமாதானம் பற்றியும், இடைக்கால நிர்வாகம் பற்றியும் பொது மக்களுக்கு சரியான விளக்கம் அளிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இதன்போது தற்போது ஆளும் கட்சி கடைப்பிடிக்கும் அரசியல் முறை, மக்களின் வாழ்க்கை முறை, இதுவரை நடைபெற்ற ஆட்சி முறை அது மக்களுக்கு ஆற்றிய சேவைகள் இனி புதிதாக மக்களுக்காக ஏற்படுத்த வேண்டிய நிர்வாகமுறை, இடதுசாரிகளின் அரசியல். கூட்டு திரக்கட்சியினது அரசியல் கொள்கைகள் என்பன பற்றி ஆராயப்படும்.

இத்திட்டத்தின் கீழ் நாட்டின் சனத்தொகையில் 10 வீதமானோரிடமிருந்து சமாதானத் திற்கு ஆதரவு திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மிகவும் அவசர தீர்மானம் ஒன்றுக்கு அமைவாக, நம்பத்தகுந்த ஊடகங்களில் வெளியிடுவதற்கு, இடைக்கால சபை தொடர்பாக நேர்காணல் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கை நடத்துவதற்காக முன்னைய இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் சமாதான முன்னெடுப்புக்கள் சாதகமாயமைய கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்துவதற்கு கலைஞர்கள், தொழிற்சங்கவாதிகள், பௌத்த பிக்குகள்,கத்தோலிக்க குருமார், சட்டத்தரணிகள் ஆகியோரும் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனர்.

## வர்த்தக அமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே வர்த்தக அமைப் பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வர்த்தகர்கள் நாற்பது பேர் சிறிலங்காவில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆராயவே வொஷிங்டனில் இந்த வர்த்தக அமைப்பு உருவாக் கப்பட்டுள்ளது.

## பாதையமைப்பில் காணிகளை இழந்தோருக்கு இழப்பீடு

(கொழும்பு)

தென்பகுதியில் அதிவேக பாதையமைப்பால் காணிகளை இழந்த 4,194 பேருக்கு இழப்பீடாக 130 கோடி ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 8,745 ஏக்கர் பரப்பளவு நிலம் இத்திட்டத்துக்கு உட்படுவதால் 1200 குடும்பங்கள் முழுமையாக இடப்பெயர்வுக்குள்ளாகியிருப்பதாகவும் 4200 குடும்பங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அதிவேக பாதை கொட்டாவயிலிருந்து மாத்தறை-கொடகம வரைக்குமான 126 கிலோ மீற்றர் நீளமானதாகும்.

# எமர்கிங் கிண்ணப் போட்டியில் சிறிலங்காவுக்கு இரண்டாவது வெற்றி

எமர்கிங் கிண்ணத்துக்கான 23 வயதுக்குட்பட்ட வளர்ந்து வரும் அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி பாகிஸ்தான் அணியை 94 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

முதல் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 8 விக்கட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 36.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

தலா இரண்டு போட்டிகளில் விளையாடியுள்ள இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா அணிகளில் சிறிலங்காவிற்கு 2 வெற்றிகளும், பாகிஸ்தானுக்கு 1 வெற்றியும் கிடைத்தன. இந்தியா இரண்டு போட்டிகளிலும் தோல்வி கண்டுள்ளது.

## வழக்குத் தொடர முடிவு!

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா பங்கேற்ற தற்கான உத்தரவாதத் தொகையின் 30 கோடி ரூபாவை நவம்பர் 1ஆம் திகதிக்குள் வட்டியுடன் தராவிட்டால் சர்வதேச கிரிக்கெட் சபை மீது வழக்குத் தொடரப்போவதாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா தெரி வித்துள்ளார்.

ஐ.சி.சி.யின் சர்வதேச அபிவிருத்தி கூட்டம் இன்று பார்படோபில் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்குப் பின்னரும் உத்தரவாதத் தொகையை தராவிடில் சுவிட்சர்லாந்து சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என்று அவர் கூறினார்.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்கான ஐ.சி.சி.யின நிபந்தனைகளுக்கு உட்பட இந்திய வீரர்கள் மறுத்தனர். இதற்கு நஷ்டஈடு மதிப்பிடப்படும் வரை உத்தரவாதத் தொகையை நிறுத்தி வைப்பதென ஐ.சி.சி முடிவெடுத்ததும் தெரிந்ததே.



# நேற்று சிறப்புற நடைபெற்ற சிறுவர், மூதாளர் தின நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தினமும் முதியோர் தினமும் நேற்று பல பகுதிகளில் சிறப்புற நடைபெற்றன.

கிளிநொச்சி எமது விளையாட்டு மைதானத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் வடக்கு-கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பதினொரு சிறுவர் இல்லங்களை சேர்ந்த சிறார்கள் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கினை பதினொரு இல்லங்களைச் சேர்ந்த பதினொரு சிறுவர்கள் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை தமிழீழத் விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் துணை நிறைவேற்று இணைப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார்.

இப்போட்டியில் சாலமோன்நகர் தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்லம், காந்தரூபன் அறிவுச் சோலை, புனிதபூமி, பாரதி இல்லம், காந்திநிலையம், ஆரோபணம், செஞ்சோலை, இனியவாழ்வு, தணிகை இல்லம் போன்ற சிறுவர் பராமரிப்பு நிலையங்களைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்துகொண்டனர்.இதில் வலைபந்து போட்டியில் முதலாம் இடத்தை குருகுலமும், இரண்டாம் இடத்தை செஞ்சோலையும், மூன்றாம் இடத்தை பாரதி இல்லமும் பெற்றன.

கரப்பந்துப் போட்டியில் முதலாம் இடத்தை நவஜீவனம் சிறுவர் இல்லமும், இரண்டாம் இடத்தை ஆரோபணம் சிறுவர் இல்லமும், மூன்றாம் இடத்தை காந்திநிலையம், சாலமோன் நகர் தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்லமும், பெற்றுக் கொண்டன. உடற்பயிற்சி போட்டியில் தென்னிந்திய திருச்சபை சிறுவர் இல்லம் முதலாம் இடத்தையும், புனிதபூமி சிறுவர் இல்லம் இரண்டாம் இடத்தையும், காந்தரூபன் அறிவுச்சோலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. அத்துடன் கராத்தே, கம்படி போன்ற கண்காட்சிப் போட்டிகளும் நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்று உதவிப் பணிப்பாளர் இனியவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் தங்கன் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். தொடர்ந்து வெற்றி பெற்ற அணிகளுக்குக் கேடயங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன. பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச பாடசாலைகளில் நடைபெற்ற 'சிறுவர் தின நிகழ்வில் நடனம், கதை மற்றும் பல கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் முன்பள்ளிகளுக்கிடையிலான வரைதல் போட்டி இடம்பெற்றது. இதில் 18 முன்பள்ளிகள் கலந்து கொண்டனர்.

சர்வதேச மூதாளர் தினம் நேற்று கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மூதாளர் பேணலகப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம்,மாவீரர்போராளிகள் குடும்பநலன் காப்பகப்பொறுப்பாளர் திருக்குமரன் ஆகியோர் ஏற்றி வைக்க தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்ஏற்றி வைத்தார்.

அடுத்து மண்டப நிகழ்வில் தலைமையுரையினையடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றது. சிறப்புரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் கிளி வலய கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து முதியோர்களை கௌரவித்துப் பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து முதியோர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி அரச அதிபர் தி. இராநாயகம், கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள் பெருமளவில் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். (சோ,05.20)

## சிறி...

பூர்த்தி செய்யக்கூடியதாக அமையுமென கூறப்படுகின்றது. கனடாவுக்கான இலங்கைத்தூதுவர் கீதாங்கனி டி சில்வா இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ திங்களன்று கனேடிய தூதுவர் பில் கிரகம் உடன் உத்தி யோகபூர்வ பேச்சுவார்த்தையை நடத்தினார்.

# தேர்தல் முறையை மாற்ற ஆணையாளர் சிபார்சு

(கொழும்பு)

தற்போதைய தேர்தல் வழிமுறைகள் மாற்றப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றிற்கு கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு சமமான விரிவான அதிகாரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் பொதுவாக தேர்தல்கள் நடைபெறும் போதும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் ஊடகவியலாளர்களின் செயற்பாடு போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவென தேர்தல் அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

வாக்காளர் இடாப்புகள் மக்களின் பார்வைக்கென குறிப்பிட்ட இடங்களில் நாடெங்கிலும் வைக்கப்படுதல் அவசியமாகும் எனக் கூறிய அவர் அரசியல் யாப்பில் 17ஆவது திருத்தத்தை உதாசீனம் செய்யும் வகையில் பல அதிகாரிகள் நடக்கின்றனர் என்றும் தேர்தல் ஆணையாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

# 3 நாள் விஜயமாக பிரதமர் ரணில் இந்தியா செல்லத் திட்டம்

(கொழும்பு)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாதம் 20ஆம் திகதி புதுடில்லி செல்லவிருப்பதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் இந்தியப் பிரதமர் அடெல் பிகாரி வாஜ்பாயைச் சந்தித்து அபிவிருத்தி மற்றும் வர்த்தக பொருளாதார விடயங்கள் பற்றி கலந்துரையாடுவார் எனத் தெரியவருகிறது.

## குடாநாட்டில்...

கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார்.இதேவேளை இவ்வழக்குத் தொடர்பான எதிராளிகளாக தற்போதைய இராணுவ தளபதியான லயனல் பலகல்ல, குறித்த காலப் பகுதியில் நாவற்குழிப் பகுதியில் பணியாற்றி வந்த இராணுவ அதிகாரியான லெப்.கேணல் துமிந்த ஹெப்பற்றிக்கெலாவ மற்றும் பாசையூரில் கடமையாற்றி வந்த படை அதிகாரியான கப்டன் எஸ்.பண்டார ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் 29ஆம் திகதி நடாத்துவதென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## புலிகளைப்...

சென்றிருக்கும் வெளிநாட்டமைச்சர் டிரோன் பெனாண்டோ அமைச்சர் கிரகம், டேவிற் கில்கோர் ஆகியோரைச் சந்தித்து உரையாடியுள்ளார். 24 வருடங்களுக்கு பின் இலங்கை வெளிநாட்டமைச்சர் கனடா சென்றிருப்பது இதுவே முதற்தடவையாகும். சுமார் இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கனடாவில் வசிப்பதாக கூறப்படுகிறது. இவ்வருடம் கனடா பத்துமில்லியன் டொலரை இலங்கைக்கு உதவித் தொகையாக வழங்கியுள்ளது.

## 1500 பேருடன்...

சிறப்புரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ மண்ணில் முதல் வித்தாகிய மாவீரர் என்ற பெருமையையும் இந்த சாள்ஸ் அன்ரனியே பெறுகிறார். இவர் 1983ஆம் ஆண்டு எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டு காயம் அடைந்த வேளை எதிரியிடம் தான் பிடிபடக்கூடாது பிடிபட்டால் எமது ரகசியங்கள் வெளியில் சென்றுவிடும் என்பதற்காகத் தன்னை சுடுமாறு கட்டளை இடுகின்றான். இந்த பெரும் தளபதி அன்று எடுத்த ரகசியம் பேணுதல் என்ற அந்த முடிவு இன்று எமது போராட்டத்தில் ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தி இன்று அவரது எண்ணம்போல் பெருமளவு வளர்ச்சியை எட்டிநிற்கிறது எமது போராட்டம்.

1990ஆம் ஆண்டு எதிரி எமது தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களிலும் மரபுரீதியான போரை நடத்துவதற்கு தயாராகின்றான். இதற்கு எதிராக நாமும் மரபு ரீதியாக போராட வேண்டும் எமது நிலங்களைப் போராடி மீட்க வேண்டும் என்ற அடிப்படையில் எமது தலைவர் அவர்களால் 1991ஆம் ஆண்டு ஒரு மரபுரீதியான படையணியாக எமது விடுதலைப் போராட்டத்தில் தமிழீழத்தில் முதலாவது மரபு ரீதியான பெரும் போர்ப்படையணியாக சாள்ஸ் அன்ரனிப்படையணி தோற்றம் எடுத்தது. அந்த வேளை எமது போராட்டத்தில் பெரும் திருப்புமுனை என்றே கூறலாம். எமது எட்டு மாவட்டங்களில் இருந்தும் இணைக்கப்பட்ட இந்த படையணி யாழ்குடாநாட்டின் தலைவரின் நேரடிப்பார்வையில் 1500 பேருடன் உருவாக்கப்பட்டது. தலைவர் அவர்களால் இந்தப் படையணி உருவாக்கப்பட்டதன் நோக்கம் தமிழீழத்தை மீட்கும் வரை இந்தப் படையணி தமிழீழத்தின் அனைத்து மாவட்டத்திற்கும் சென்று போரியல் ரீதியிலான வரலாற்றைப் படைக்க வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும் என்பதே அவரது எண்ணக் கருவாகவும் அமைந்தது

அதுமட்டுமன்றி சீலனுடைய இந்த வரலாறு அவருடைய இந்த வீரச்செயல் அவரது துணிச்சல், அவரது அதிஉயர் தியாகம் என்பனவே இந்த விடுதலை அமைப்பின் உறுதியை முதலாவதாக வெளியில் எடுத்துக் காட்டியது. அவரது பெயர் தொடர்ந்து நிலைக்க வேண்டும் அவரது துணிச்சல் அவரது தியாகங்கள் என்பன தொடர்ந்து மேலோங்க வேண் டும் என்பதற்காக இந்த சாள்ஸ்அன்ரனி என்ற பெயரில் பெரும் படையை உருவாக்கினார். இதிலிருந்து நாம் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும். சாள்ஸ் அன்ரனி சாதாரணமானதொரு மனிதன் அல்ல. இவரது பார்வை எமது தலைவரைப் போன்றவடிவம் கொடுத்து நிற்கின்றது.

நாம் விடுதலைப்போராட்டத்தில் ஒரு பெரும்விலையை கொடுத்திருக்கின்றோம். எமது போராட்ட வரலாற்றில் சாள்ஸ் அன்ரனி ஒருபெரும் வீரத் தளபதியாக திகழ்கிறார். இந் தளபதியின் வீரத்தால் நாம் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம்.

இந்த சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இன்று பத்து ஆண்டுகளைத் தாண்டியிருக்கிறது. இந்த பத்து ஆண்டுகளும் எமது தலைவரின் சிந்தனைக்கு ஏற்ப வடிவம் கொடுந்திருக்கிறது. கொடுத்து வருகின்றது. தொடர்ந்தும் கொடுக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இந்த படையணி நூற்றுக்கும் மேற்பட்ட சமர்களை சந்தித்தது.

இன்று சாள்ஸ் அன்ரனி படையணியில் 1056 போராளிகள் மாவீரர் ஆகியுள்ளனர். அவர்களில் 14 பெரும் தளபதிகளை இழந்திருக்கிறோம். அதிலும் ஆறு விசேட தளபதிகளை இழந்திருக்கிறோம். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் இருந்து இன்று வரை 15 கரும்புலிகள் தமது உயிரைத்தியாகம் செய்துள்ளனர். இத்தகைய பெரும் தியாகங்களை செய்து இன்று பெரும் வெற்றிகளைப் பெற்று மிகவும் சிறந்த போர்க்குணமிக்க ஒரு மரபு வழியான தாக்குதல் படையணியாக இந்த சாள்ஸ் அன்ரனியின் படையணி தலைநிமிர்ந்து நிற்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## நெருப்பாற்று...

தொடர்ந்து, ஈகச்சுடரை கிளி. இந்துக்கல்லூரி பிரதி அதிபர் பங்கையற்செல்வன் ஏற்றிவைத்தார். சாள்ஸ் அன்ரனியின் உருவப்படத் திற்கான மலர்மாலையை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து வரவேற்புரையினை சிறப்புத் தளபதி லெப். கேணல் நகுலன் நிகழ்த்தினார். சிறப்புரையை எழுத்தாளர் நிலாந்தன் நிகழ்த்தினார். அடுத்து "நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்" எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் தளபதி கோபித் வெளியிட்டு வைக்க, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பெற்றுக்கொண்டார்.

அடுத்து நூல் அறிமுக உரையை தளபதி கேணல் பால்ராஜ் நிகழ்த்தினார். நூலின் மதிப்பீட்டுரையை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். நன்றியுரையைத் தொடர்ந்து நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

நேற்று மாலை 3.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாள்ஸ் அன்ரனிப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதா பொதுச்சுடரை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்துள்ளார். இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத்தளபதி லெப். கேணல் பல்லவன் ஏற்றிவைக்க, சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரர் லெப்.கேணல் ராஜனின் தாயாரும், மேஜர் ராகவனின் தாயாரும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து வரவேற்புரையை சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதி லோறன்ஸ் நிகழ்த்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதி அமுதா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வின் போது சிறப்புரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், நூலுக்கான வெளியீட்டுரையினை நவமறிவுக்கூடப் பணிப்பாளர் கலைமேகனும் நிகழ்த்தினர். நூலின் முதல் பிரதி துணைத் தளபதி பல்லவனினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இப்பிரதியை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் முதல்முதல் வீரச்சாவடைந்த துணைதளபதி மாவீரர் ஜெப்ரினின் தாயார் பெற்றுக் கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், யாழ். பல்கலைக் கழக விரிவுரை யாளர் விஷ்ணுராசா ஆகியோரும் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (லோ, 33)


# கேள்வி அறிவித்தல் - கால நீடிப்பு

2003.09.25 அன்றைய தினம் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த முல்லைத்தீவு நகர மீன் விநியோகத்திற்கான இரண்டு எண்ணிக்கையுடைய **100KV/440V/50Hz** பேர்கின்ஸ் இங்கிலாந்து தயாரிப்பான மின் பிறப்பாக்கிகளைப் பெற்று வழங்குவதற்கான கேள்வி அறிவித்தலில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கால எல்லை 04.10.2003 வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 750/- உம், மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ 24,000/- உம் செலுத்தி முல்லைத்தீவு மாவட்ட கச்சேரி, புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 07.10.2003 அன்று மு.ப. 10.00 மணிக்கிடையில் முல்லைத்தீவுக் கச்சேரியில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இடலாம். கேள்விகள் 07.10.2003 அன்றைய தினமே மு.ப. 11.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி தருனரோ அல்லது அவரின் எழுத்து மூலமான பிரதிநிதியோ நேரடியாகச் சமுகமளிக்கலாம்.

**திருமதி.இமெல்டா சுகுமார்,**
**மாவட்ட கேள்விச்சபைத் தலைவர்/**
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு.**

(சி-8632)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.